# குருவின் மகிமை

## சாந்திப்பிரியா



ஒரு காலத்தில் கோதாவரி நதிக் கரையில் வேத சர்மா என்ற ஒரு பிராமணர் வாழ்ந்து வந்தார். அவரை குருவாக ஏற்றுக் கொண்ட பல சீடர்கள் அவருக்கு இருந்தார்கள். அவர் நல்ல பாண்டித்தியம் பெற்றவர். அவருடைய சீடர்களில் தீபிகா என்ற சீடன் குருவிடம் அபார பக்தி கொண்டவராக இருந்தார். குருவுக்கு தேவையான அனைத்து பணிவிடைகளையும் செய்தவண்ணம் இருந்தார். இப்படியாக பல காலம் ஓடியது.

ஒருநாள் வேத சர்மா தனது அனைத்து சீடர்களையும் அழைத்து அவர்களிடம் கூறினார் ‘பிள்ளைகளே, நீங்கள் அனைவரும் எனக்கு பக்தி பூர்வமாக பணிவிடை செய்வதைக் கண்டு ஆனந்தம் அடைகிறேன். நான் மரணம் அடைவதற்கு முன்னால் உங்களுக்கு இந்த சம்சார பந்தத்தில் இருந்து விடுதலை கொடுத்து முக்தி தர விரும்புகிறேன். ஆனால் ஆயிரமாயிரம் வருடங்களுக்கு முன்னால் ஒரு பிறவியில் நான் செய்திருந்த பாவங்கள் என்னை இந்த ஜென்மத்தில் தண்டிக்க உள்ளன. நான் இத்தனை தவம் செய்தும், புண்ணிய நதிகளில் நீராடியும், புனித ஆலயங்களுக்கு சென்றும் சாப விமோசனம் எனக்குக் கிடைக்கவில்லை. நான் மோட்ஷம் பெற உள்ள வழியில் அந்த பாவங்களின் பிரதிபலிப்பு என் பயணத்தை தடுக்கலாம் என்று உணரத் துவங்குகிறேன். அப்படி அவற்றின்

தாக்கம் ஏற்பட்டால் என் இலட்சியம் நிறைவேற இன்னும் பல காலம் பிடிக்கும். ஆனால் நானோ விரைவில் மோட்ஷத்தை அடைய ஆசைக் கொண்டுள்ளேன். ஆகவே பூர்வ ஜென்ம பாவங்களினால் கிடைக்க உள்ள தண்டனைக் காலம் வருவதற்கு முன்பாக நானே மனதார அவற்றை ஏற்றுக் கொண்டு பிராயசித்தம் செய்ய விரும்புகிறேன். அப்படி செய்தால் அடுத்த ஜென்மத்தில் எனக்கு அந்த பாவங்களினால் எந்த கெடுதலும் ஏற்படாது. ஆகவே நான் காசிக்குச் சென்று தவம் செய்து அந்த பாவங்களை தொலைத்துக் கொள்ள முடிவு செய்துள்ளேன். அங்கேயே உங்களது நன்மைக்காகவும் பிரார்த்தனை செய்வேன்.

காசியை அவிமுக்த ஷேத்திரம் என்பார்கள். அத்தனை புண்ணியமான ஷேத்திரம் அந்த பூமி. அங்கு சென்று தவம் இருந்து பிராயசித்தம் செய்தால் உலக பந்த ஆசைகள் அனைத்தும் அழிந்து போய் அந்த நிலையில் அனைத்து பாபங்களும் விலகி விடும். ஆகவே அங்கு செல்ல உள்ள என்னோடு யாரேனும் துணைக்கு வந்து நான் செய்ய உள்ள பிராயசித்ததின்போது எனக்கு உதவியாக இருக்க வேண்டும் என விரும்புகிறேன்' என்று கூறிவிட்டு சற்று நேரம் மௌனமாக இருந்தார்.

அவர் கூறியதைக் கேட்ட அனைத்து சீடர்களும் வருத்தம் அடைந்தார்கள். அப்போது தீபிகா எனும் சீடன் கூறினார் 'குருவே உங்களுடைய இந்த திடீர் முடிவு எங்கள் மனதை வாட்டி வதைக்கிறது. ஒருவனுடைய வாழ்க்கையில் அவன் பெற்றிடும் பெரிய பாக்கியமே குரு சேவை செய்வதுதான். அதை விட வேறு எந்த சேவை செய்தாலும் அவை தெய்வ சேவை ஆகாது. ஆகவே உங்களுடன் நான் வர பரிபூரணமாக சம்மதிக்கிறேன். அங்கு வந்து உங்களுக்கு சேவை செய்ய விரும்புகிறேன். என்னை உம்முடன் செல்ல நீங்கள் அனுமதிக்க வேண்டும்' என்று கூறியதும் வேத சர்மா மீண்டும் தொடர்ந்தார்.

'பிள்ளாய், உன் குரு பக்தியை கண்டு நான் மனம் மகிழ்கிறேன். ஆனால் ஒன்றை நீ தெரிந்து கொள்ள வேண்டும். எனக்குள்ள பாவம் சாதாரணமானது அல்ல. அது தர உள்ள தண்டனை காலதீபிகா எனும் கடுமையான வெண்குஷ்ட வியாதி ஆகும். அந்த வியாதி என்னை இருபத்தி ஒரு வருடங்கள் ஆட்டிப் படைக்க உள்ளது. அப்படிப்பட்ட வியாதிஸ்தனின் அருகில் செல்லவே முகம் சுளிக்கும் அளவுக்கு அதன் ரணமும், ஒழுகிக் கொண்டு இருக்கும் ரத்தத்தின் சகிக்க முடியாத நாற்றமும்

இருக்கும். அது மட்டும் அல்ல அப்படிப்பட்ட வியாதியை சுமக்க உள்ள என்னை தோளில் சுமந்து கொண்டு என்னை அங்கும் இங்கும் அழைத்துச் செல்ல வேண்டி வரும். ஆகவே இவற்றை மனதில் கொண்டு உங்களில் யாராவது மனமுவந்து வந்தால் மட்டுமே எனக்கு சேவை செய்ய இயலும். நானும் வருகிறேன் என்பது பெரியதல்ல. இப்படிப்பட்ட வியாதிஸ்தனுக்கு சேவை செய்ய இயலுமா என்பதை நன்கு ஆலோசித்தப் பின்னரே என்னுடன் வர சம்மதிக்க வேண்டும் என்பதினால்தான் இவற்றை நான் தெள்ளத் தெளிவாக கூறுகிறேன்'.

கேட்ட தீபிகா அசரவில்லை. அவர் கூறினார் 'குருநாதா, உங்களுக்கு என்ன வந்தாலும் உங்களை விட்டு பிரியாமல் இருந்து சேவகம் செய்வேன் என்பதை சத்திய வார்த்தையாகவே கூறுகிறேன். நீங்கள் தயங்காமல் என்னை அழைத்துக் கொண்டு போகலாம். ஒருவன் தன் வாழ்க்கையில் செய்யும் தெய்வீக சேவையில் பெருமைத் தரும் தெய்வீக சேவையே குருவிற்கு சேவை செய்வதுதான் என்பதை நன்கு உணர்ந்திருக்கிறேன். வருமுன் காப்போன் என்ற பழமொழி போல பிற்காலத்தில் வியாதிகள் வந்து தொந்தரவு செய்யாமல் இருக்க வேண்டும் என்றால் அவற்றை முற்காலத்திலேயே வேண்டிப் பெற்றுக் கொள்ளலாம் என்று சாஸ்திரங்கள் கூறுவதால், நீங்கள் தயங்காமல் எங்கு செல்ல வேண்டுமோ அங்கு செல்ல ஏற்பாடுகளை செய்து கொள்ளுங்கள். உங்களுடன் அங்கு செல்ல இந்த சீடனுக்கு உத்தரவும் தாருங்கள்'.

தீபிகா கூறியதைக் கேட்ட குருநாதர் மனம் மகிழ்ந்தார். 'சரி நீ என்னுடன் காசிக்கு புறப்பட்டு வா. அங்கு சென்று என் பாவத்தை ஏற்றுக் கொள்கிறேன்'. என்று கூறி விட்டு காசிக்குப் புறப்பட்டுச் சென்றார். காசிக்கு சென்று மணிக்கங்கை எனும் நதியின் வடக்குப்புறத்தில் இருந்த கம்பலீஷ்வாரர் எனும் இடத்தில் ஒரு குடிசைக் கட்டிக் கொண்டு அங்கு தங்கினார்கள். மறுநாள் அதிகாலை இருவரும் எழுந்து மணிக்கங்கையில் குளித்து விட்டு கரையில் வந்ததும் வேத சர்மாவுக்கு தேகம் முழுவதும் குஷ்ட நோய்களிலேயே மிகக் கொடுமையான காலதீபிகா என்ற தொழு நோய் பற்றிக் கொண்டது. இருவரும் அருகில் இருந்த ஆலயத்துக்கு சென்று வழிபட்டு விட்டு வந்தப் பின் மறுநாள் முதல் அந்த நோயின் கடுமை அதி வேகமாக அவரை தாக்கத் துவங்க குருநாதர் நடக்கவே சிரமப்படும் அளவு நிலைமை மோசம் ஆயிற்று. தீபிகாவே அனைத்து வேலைகளையும் செய்ய வேண்டி இருந்தது. குருவை தனது தோளிலேயே சுமந்து கொண்டு நதியில் நீராட

வைக்கவிட்டு வர வேண்டி இருந்தது. நாள் செல்லச் செல்ல நோயின் கடுமையினால் தீபிகா மீது தேவை இல்லாமல் குருநாதர் கோபமடைய ஆரம்பித்தார்.

தீபிகா எப்படித்தான் சமைத்துப் போட்டாலும் அதில் குறைக் கூறி அதை அவன் மீதே துப்புவார். தீபிகா சாப்பிட அமர்ந்தால் அவர் தட்டின் மீதே காரி உமிழ்வார். ஆனாலும் தீபிகா முகம் சுளிக்காமல் அந்தக் கொடுமைகளை எல்லாம் சகித்துக் கொண்டே அவருக்கு பணிவிடைகளை செய்து வந்தார். சீழ்பிடித்துப் போன கொப்புளங்களில் இருந்து ரத்தம் வடியலாயிற்று. அவற்றையும் தீபிகாவே துடைத்து விட வேண்டியதாயிற்று. இரவெல்லாம் தீபிகா தூங்க முடியாமல் இருக்கும். அதன் காரணம் வலியினால் அவருடைய குருநாதர் கத்துவதே. இவ்வளவு கஷ்டத்திலும் சேவை செய்து வந்தாலும் குருநாதருக்கு தீபிகாவின் மீது குறை இருந்து கொண்டே இருந்தது. அவரைக் வேண்டும் என்றே திட்டித் தீர்ப்பார். ஆனாலும் குருவிற்கு செய்து வந்த பணிவிடைகளை தீபிகா எந்த விதத்திலும் குறை வைக்காமல் செய்து வந்தார். காலப்போக்கில் குருநாதரின் கண் பார்வையும் மறைந்தது. முற்றிலும் குருடராகி விட்டார்.

இப்படியாக நாட்கள் நகர்ந்து கொண்டு இருக்கையில் காசியில் அவை அனைத்தையும் பார்த்துக் கொண்டு இருந்த காசி விஸ்வநாதர் (சிவபெருமான்) தீபிகா தனது குருவுக்கு செய்யும் பணிவிடைகளைக் கண்டு அவர் மீது இரக்கம் கொண்டார். ஆகவே ஒருநாள் வேத சர்மா உறங்குகையில் பகவான் காசி விஸ்வநாதர் தீபிகாவுக்கு முன் தோன்றி 'உனக்கு என்ன வரம் வேண்டும்' என்று கேட்க, தீபிகாவும் உடனடியாக உள்ளே சென்று தனது குருவை எழுப்பி தன் முன் தோன்றிய பகவான் சிவபெருமான் ‘உனக்கு என்ன வரம் வேண்டும்' என்று கேட்பதினால் 'குருநாதருக்கு உடல் நலத்தைக் கொடு' என்று வேண்டவா’ என்று குருவிடம் வினவ, குருநாதர் அவர் மீது எரிந்து விழுந்தார்.

‘உனக்கு என்னிடம் சேவகம் செய்ய பிடிக்கவில்லை என்று நினைக்கிறேன். அதனால்தான் இப்படிக் கேட்கிறாய். நான் இந்த ஜென்மத்திலேயே என் பாபங்களைத் தொலைத்து விட நினைத்தால், நீயோ அதை அடுத்த ஜென்மத்திலும் அனுபவிக்க ஏற்பாடு செய்யட்டுமா என்று கேட்கிறாயே. அதை விட என்னை இந்த கங்கையிலேயே தூக்கிப் போட்டுவிட்டு சென்று விடுவதுதானே’ என்று கத்தினார்.

அதைக் கேட்டும் தீபிகா வருத்தம் சற்றும் அடையாமல், குருவிற்கு வந்துள்ள வியாதியின் உபாதையினால் அப்படி எரிந்து விழுகிறார் என்று மனதில் எண்ணியவாறு உடனடியாக பகவான் காசி விஸ்வநாதரிடம் சென்று தனக்கு எந்த வரமும் வேண்டாம் என்று கூறி விட்டு வந்து விட்டார். குருநாதருக்கு அவருடைய சேவகம் தொடர்ந்தது.

தேவலோகத்துக்கு திரும்பிச் சென்ற பகவான் சிவபெருமானும் நடந்த விவரங்கள் அனைத்தையும் பகவான் விஷ்ணுவிடம் கூற அவற்றைக் கேட்ட பகவான் விஷ்ணு 'இப்படியும் ஒரு சிஷ்யன் குருவுக்கு பணிவிடை செய்வாரா?' என ஆச்சர்யம் அடைந்து அந்த சிஷ்யரை தானும் சந்தித்து அவருக்கு வரம் ஏதும் தர முயற்சி செய்யலாம் என முடிவு செய்தபின் பூலோகம் சென்றார். அங்கு சென்று தீபிகாவுக்கு காட்சி தந்தவர் ‘குழந்தாய், உன் குரு பக்தியைக் குறித்து பகவான் சிவபெருமான் என்னிடம் மிக மனநிறைவோடு கூறினார். உன்னைப் போல இந்த பூமியிலே ஒரு சிஷ்யன் இருக்க முடியாது எனும் வகையில் சிறப்பாக குரு வந்தனம் செய்கிறாய். ஆகவேதான் நானும் உன்னிடம் வந்தேன். சரி, உன் குருவிற்கு எந்த வரமும் வேண்டாம். உனக்கும் இப்போது எந்த வரமும் வேண்டாம். ஆனால் அவர் மறைவுக்குப் பிறகு உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேள். அதை தந்துவிட்டுச் செல்கிறேன்’ என்று கூற தீபிகா எத்தனை கூறியும் பகவான் விஷ்ணுவும் அவரை விடாமல் நச்சரித்து 'என்ன வரம் வேண்டும் என்று கூறியே ஆகவேண்டும்' என்று கட்டாயப்படுத்த முடிவாக தீபிகா அவரிடம் கூறலானார்.

‘தெய்வமே, உங்களது தரிசனத்தைப் பெற்று பல வரங்களை பெற நினைக்கும் பல்லாயிரக்கணக்கானோர் தவித்துக் கொண்டு உள்ளபோது என்னிடம் வந்து ஏன் வரம் என்ன வேண்டும் என்று கேட்கிறீர்கள்? குருவிற்கு சேவை செய்வதை விட ஒருவனது வாழ்க்கையில் பெரிய பாக்கியம் வேறு என்ன இருக்க முடியும்? அதை விட வேறு என்ன வேண்டும்? குரு என்ற இரண்டு எழுத்து மந்திரம் மும்மூர்த்தி எனும் மூவரையும் விட வலிமையானது என்பதாக நான் அறிந்திருக்கிறேன். என் குருவின் உண்மையான உருவத்தைக் கண்டு களித்திடவும், அவருக்கு அனைத்து விதத்திலும் சிறப்பாக பணிவிடை செய்ய என்ன செய்ய வேண்டும் என்பதையும் என் மனதிலே பதிய வைத்தால் அதுவே போதுமானது’. இப்படிக் கூறிய பின் அவரை விழுந்து வணங்கியவன் தான்

இப்பொழுது கேட்ட வரங்களைத் தவிற தனக்கு வேறு எந்த விதமான வரமும் தனக்குத் தேவை இல்லை என்று கூறினார்.

ஆனால் பகவான் விஷ்ணுவோ அவருக்கு வரம் தராமல் செல்வதில்லை என்ற முடிவோடு இருந்ததினால் தீபிகா கூறினார் ‘பிரபோ, ஆகவே அப்படி ஏதாவது வரம் கொடுத்து விட்டுதான் செல்வேன் என நீங்கள் கூறினால் என் குருநாதருக்கு இன்னும் சிறப்பாக பணிவிடை செய்யும் மனதை எனக்கு கொடுத்து விட்டுச் செல்லுங்கள்’ என்று பணிவுடன் கேட்க அதைக் கேட்ட பகவான் மகாவிஷ்ணு பரமானந்தம் அடைந்துக் கூறினார் ‘குழந்தாய் நீ உன் குருவிற்கு செய்யும் மகத்தான சேவையையும், உன் குரு பக்தியையும் கண்டு வியக்கிறேன். குருவுக்கு அவருடைய சிஷ்யர் செய்யும் சேவையும் எனக்கு செய்யும் சேவையும் ஒன்றே ஆகும். அந்த நிலையில் உள்ள சிஷ்யர் யாராக இருந்தாலும், அவன் கேட்காமலேயே அவனை நான் என் என்னுடைய பக்தனாகவே ஏற்றுக் கொள்வேன். நானும் குருவும் வெவ்வேறானவர்கள் அல்ல. நீ உன் குருவிற்கு செய்து வரும் சேவையை எனக்கு செய்துவரும் சேவையாகக் கருதியே உனக்கு அருள் புரிய இங்கு வந்தேன். நீ கேட்ட அனைத்தையும் நீ அடைவாய்’ என்று அவருக்கு அருள் புரிந்துவிட்டு பகவான் விஷ்ணு மறைந்து போனார்.

அவர் சென்றதும் தீபிகா உள்ளே சென்று குருவின் முன்னால் நிற்க தீபிகா கூறும் முன்னரே அனைத்தையும் ஞானதிருஷ்டியினால் அறிந்து கொண்ட குரு அவரிடம் 'பகவான் விஷ்ணுவிடம் இருந்து நீ என்ன வரம் பெற்றாய்?' என்று கேட்டார். நடந்த விவரங்கள் அனைத்தையும் சற்றும் மாற்றாமல் 'குருவே, நான் யாரையும் எனக்கு தரிசனம் தருமாறு கேட்காமல் இருந்தாலும் பகவான் சிவபெருமானும், பகவான் விஷ்ணு என்னிடம் அவர்களாகவே வந்து உனக்கு என்ன வரம் வேண்டும் என்று மீண்டும் மீண்டும் கேட்டதினால் அவற்றை மீற முடியாமல் போய் எனக்கு எப்பொழுதும் என் குருவிற்கு பணி செய்யும் பாக்கியத்தைத் தருமாறு அவர்களிடம் கேட்கும்படி ஆகிவிட்டது’என்று தீபிகா தனது குருவிடம் கூறினார்.

அடுத்தகணமே தீபிகா முன்னால் பளபளக்கும் சரீரத்துடன் எந்த வியாதியும் இல்லாத நிலையில் காட்சி தந்த வேத சர்மா தீபிகாவை ஆசிர்வதித்தார் ‘தீபிகா, உன்னுடைய குரு பக்தியை சோதிக்கவே நான் இந்த நாடகத்தை

நடத்தினேன். நீயே ஒரு குருவின் உண்மையான சிஷ்யன். இனி உன் வாழ்வில் எந்த விதமான துயரத்தையும் நீ பெற மாட்டாய். நீ இனிமேல் இங்கு தங்கி இருக்க வேண்டும். உனக்கு மேன்மைக் கிட்டிடும். சித்திகள் கைகூடும் மற்றும் ஆத்ம சக்தியும் பெருகிடும். பல சித்தர்களும் யோகிகளும் உன்னிடம் வந்து உன்னை போற்றி வணங்குவார்கள். குபேரனின் அனைத்து அருளும் உனக்குக் கிடைக்கும். இந்த உலகில் உனக்கு கிடைக்காத தெய்வீக அருள் வேறு எதுவுமே இல்லை எனும்படி அனைத்து தெய்வீக அருளையும் நீ பெறுவாய். மும்மூர்த்திகளில் சிவபெருமானும், விஷ்ணுவும் உனக்கு ஆசி தந்துள்ளதினால் உன்னைக் கண்டமட்டிலேயே அனைவரது வியாதிகளும் விலகி ஓடும். நீ நீடூழி வாழ வேண்டும் என்பதே என் ஆசிகள்' என்று கூறிய பின்னர் அப்படியே ஆகாயத்தில் பறந்து சென்று மறைந்து விட்டார். அதற்குப் பிறகே அனைவருக்கும் தெரிந்தது தீபிகா மூலம் குருவின் மகிமையை உலகிற்கு உணர்த்த பகவான் சிவபெருமானும், பகவான் விஷ்ணுவும் சேர்ந்து நடத்திய நாடகம் அது என்பது. மேலும் பூர்வ ஜென்ம பாபங்களைத் தொலைக்கும் இடமாக உள்ள காசியின் மகிமையை எடுத்துக் காட்ட அவர்கள் நினைத்தது அதற்கு இன்னொரு காரணம்.

# The greatness of a Guru

## Santhipriya



Once on the bank of river Godavari, there lived a highly learned Brahmin named Veda Sharma. The disciples served him with devotion. He was one of the pious saints living in those period.  One of the disciples named Deepika was more devoted to him than other disciples.

One day Veda Sharma called his disciples and said 'Disciples, I am very much pleased with the devoted service of all of you. I desire to see that each one of you are relieved from the worldly desires and enter the path of salvation even before I pass away from this world. While many of the sins that I have committed in previous births have been absolved by my prayers and other appropriate acts available, I would have to face the wrath of some of the most dreadful sins not only in this life cycle, but also in the next few more births. Unless I get relieved of from those sins during this life circle itself, I would not get salvation.  Therefore in order to attain salvation in this birth itself, I have decided to voluntarily accept whatever punishments are due for the entire sins

accrued by me so long. I would be able to get absolved from those sins only in the holy city of Kasi by performing certain penance there.

I would be happy if someone accompany me in this arduous journey and be with me. But remember, those who are mentally strong may only accompany me as several hardships are to be faced by them along with me while staying there till I complete my penance by undergoing several ordeals which may befall on me'. The sudden decision of their Guru too made the disciples feel sad. Deepika accepted the bid of the Guru boldly saying 'our revered Guru, though your sudden decision to voluntarily to face the punishments for the sins accrued cause deep pain in us. I am convinced that a Guru is like light in darkness, and serving him makes turn pure in body, speech and thinking. True Guru is living God on earth. I shall spare no efforts in serving you whatever trouble you may undergo. I offer my services at your feet unconditionally. Please take me along'.

Pleased with the prayer of Deepika, Guru Veda Sharma said 'Listen Deepika, rethink many time before you commit to my service as the ordeal I am likely to undergo shall be the most arduous. May be I shall turn into a blind leper, the most dreadful disease in leprosy. It would torture me for the next twenty one years. It would be nauseating to even stay near me afflicted with this dreaded disease as the body would be petrified with pus, blood and other kinds of germs coming out from the wounds. Therefore you may have to all the time carry me on your shoulders as I would become immovable on my own. Why I bare all these facts is to forewarn you on the nature of the dreaded disease which would haunt me and still if you are resolute in your decision then only you should accompany me.

Guru Veda Sharma's caution did not dispirit Deepika who was firm in his decision telling 'Gurudev, even if you are going to be afflicted with the kind of dreaded disease you explained even from the very next day on reaching Kasi, I resolve that I shall serve you devotedly for twenty one years and ensure that you get rid of the past sins in this birth itself. I abide by the dictums of Dharma Sasthras which says 'always be prepared mentally to conquer hurdles which might arise in life every succeeding day. Therefore instead of carrying the ill effects of karmas to next few births, getting rid of them in one cycle of birth would be ideal. Therefore your decision is acceptable to me. Please proceed to Kasi without any doubt.

Veda Dharma was pleased with the assurance of Deepika and proceeded to Kasi. Deepika too accompanied his Guru and soon they reached Kashi. On reaching Kasi they built a small hut in a place called Kambaleeshwar, which was on the northern side of a river called Mani Ganga.

Early next day after both of them took bath in river Mani Ganga, instantly the Guru was afflicted with the most dreaded form of leprosy called kaladeepika. They quickly reached the nearby temple, offered worship and returned back to their hut. As days passed, the disease spread all over his body and he began to suffer the pangs of the disease which immobilized him completely. As Veda Sharma could not even walk, Deepika had to carry his Guru on his shoulder to the river bank for bath and bring him back thus nursing his Guru with great devotion. As time moved fast, the severity of the sufferings too caused Veda Sharma to become peevish by nature and often was enraged and behaved harsh to Deepika.

Deepika tried his best to prepare good and delicious food for his Guru, still Veda Sharma used to find fault in every kind of food served to him. He would spit on the

face of Deepika whenever he served food to him commenting that the food was horrible to eat. Unmindful of master's attitude, Deepika increasingly showed commitment to the services of his Guru even to the extent of wiping out the dirty puss and blood which oozed out of the boils. In order to test the patience and devotion of Deepika, when Guru Veda Sharma deliberately shouted at him in foul languages, Deepika remained calm and composed and continued to carry out his duties. Soon Veda Sharma became fully blind.

Seeing the laudable and devoted service of Deepika towards his Guru one day Lord Kashi Vishwanatha took pity on him and appeared before Deepika when Veda Sharma was fast asleep and asked him to find out from his Guru what boon he needed so that he can bestow it. Deepika unhesitatingly woke up his Guru and told him, 'Gurudev, Lord Kashi Vishwanatha is pleased to offer me boon. If you permit me, I shall pray to him to remove your physical pangs and give you sound health as before'. Hearing the words of Deepika, enraged Veda Sharma shouted at Deepika 'Listen Deepika, are you not aware that if I do not suffer these pangs in this birth, the suffering would continue to haunt me in my next birth and this would obstruct my path of salvation. Therefore if you do not want to serve me, throw me into Ganges and go away'. Even then Deepika took them lightly continued to render service to his Guru as before and went to Lord Kasi Vishwanath's shrine, offered worship and thanked him telling that he needed no boons for his Guru who desired to suffer the pangs in life in this life circle itself to wash off the effects of Karmas.

Returning to Deva log as Lord Siva praised to everyone on the services of Deepika to his master, surprised Lord Vishnu too visited Kasi, commended and persuaded him to seek some boon. Deepika pleaded before Lord Vishnu 'Mahadev, when thousands of devotees are undertaking penance seeking your favor, ignoring their prayers, you are

kind enough to manifest before me offering boons. What more happiness one would get while serving a Guru, who is as powerful as Trinities so says the Sasthras. Therefore please bless me that I shall ever remain serving my Guru with devotion in whatever spheres of life he chooses to live. I do not need any other boons than this'. Still when Lord Vishnu insisted on bestowing some boon, Deepika asked 'my lord, if you insist, please bless me to have stronger will power to serve my master with more enthusiasm and devotion. That would be sufficient'.

Elated to see the firmness of Deepika in serving a Guru, Lord Vishnu said 'son, I am pleased with the devotion displayed by you to your Guru. Service rendered to a Guru is service rendered to the divine. Me and your Guru are also no different and therefore I grant you all that you desire'. Once Lord Vishnu disappeared, Deepika rushed inside and narrated entire thing to his Guru who also learnt of everything by premonition. Deepika told him ' Gurudev, even without my asking Lord Siva and Lord Vishnu who manifested before me offering several boons, and I earnestly refused to accept them and pleaded for only for one boon which is firmness in mind to ever remain serving you incessantly'.

Saying so as Deepika raised his head to offer prayers to his Guru he saw, hale and healthy Veda Sharma standing before him in his original form, smiling. He blessed Deepika and said 'Son, You are the true disciple of a Guru. I enacted this drama only to test your devotion to your Guru. From now on you may stay here and whatever you may say shall turn out to be true. You would receive the wealth of Kuber (God of Wealth), and therefore the miseries of those who come and offer obeisance to you would vanish. Since you have the choicest blessings of Trinities, those afflicted with some disease shall be rid of their diseases when they come and worship you'. As soon as he blessed Deepika so, Veda Sharma disappeared and he was seen flying on air and

vanished soon. Deepika realized that only the Trinities had enacted the entire drama in the form of Veda Sharma to show to the world that a Guru is ocean of nectar and those who dip in the ocean shall feel the bliss and be blessed with salvation.